மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

20.10.2022 வியாழக்கிழமை
supeedsam.com
supeedsam@gmail.com

## உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிரான கூட்டறிக்கை கைச்சாத்து

தேர்தல் முறை திருத்தம் என்ற போர்வையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்து தேர்தல் வரைபடத்தை சுருங்கச் செய்யும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் கூட்டாக இன்று (20) கையெழுத்திட்டன. பாராளுமன்றத்தின் குழு இலக்க அறை 7 இல் இது இடம் பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தி,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி,தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி,43 ஆம் படையணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, பிவிதுரு ஹெல உருமய, ஸ்ரீ லங்கா மஹாஜன பக்ஷய,இலங்கை சமசமாஜ கட்சி,ஸ்ரீலங்கா கமியூனிடிஸ் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், நவ லங்கா நிதஹஸ் பக்ஷய, ஜனநாயக மக்கள் முன்னணி,விஜயதரணி தேசிய சபை, முன்னிலை சோஷலிஸ கட்சி,உத்தர சபா உள்ளிட்ட எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் கூட்டம் ஜயவர்தனபுரவில் உள்ள **MONARCH IMPERIAL** இல் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றதோடு, இதில் கலந்து கொண்ட கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் ஏகோபித்த தீர்மானத்தின் படி இந்த கூட்டறிக்கை வெளியிடப்படுகிறது.

02

## கோதுமை மா இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி



எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை கோதுமை மா இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். திறந்த கணக்கினூடாக கோதுமை இறக்குமதி செய்வதற்கே அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

## வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் வகையில் நாட்டின் சட்ட முறைமை மாற்றப்பட வேண்டும்



வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் வகையில் நாட்டின் சட்ட முறைமை மாற்றப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் இன்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு தனித்துவமான உத்தியோகபூர்வ அதிகார அமைப்பு ஸ்தாபிக்கப்பட வேண்டுமெனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

## நிபந்தனைகளின் அடிப்படையில் 22 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு

நிபந்தனைகளின் அடிப்படையில் அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. நாடாளுமன்றில் இன்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற 22 ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டபோதே எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்தார். இதேவேளை, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (வுயு) கீழ் கைது செய்யப்பட்டுள்ள வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை அரசாங்கம் விடுவிக்க வேண்டுமென, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## பச்சை நிற ஆப்பிள் பழத்தின் முதல் அறுவடை



இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பச்சை நிற ஆப்பிள் பழத்தின் முதல் அறுவடை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இன்று (20) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. எம்.பி. லக்ஷ்மன் குமார எனும் விவசாயியே கல்கமுவ, தம்புத்தேகம பிரதேசத்தில் இரண்டு ஏக்கர் காணியில் இந்த ஆப்பிள் விளைச்சலை மேற்கொண்டுள்ளார். மேற்படி விவசாயிடம் பயிர்ச்செய்கை

02

## செய்கடமை நிதியத்தை முடிவுக்குக் கொண்டுவர அனுமதி




செய்கடமை' 'கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தை முடிவுக்குக் கொண்டுவர அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்கமைய 'கொவிட் 19– சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின்' பேரில் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வந்த 85737373 என்ற உத்தியோகபூர்வ கணக்கு 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதியின் பின்னர் செயற்படாது என சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் செயலாளர் கலாநிதி.தாரக்க லியனபத்திரன தெரிவித்தார். எனவே அதில் பணம் வைப்பிலிட வேண்டாம் என்றும் இந்தக் கணக்கில் வைப்பிலிடுவதற்காக இனிமேலும் பணமோ, காசோலையோ அனுப்ப வேண்டாம் என்றும்

02

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
கல்வியே துணை
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

## அவுஸ்ரேலியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட 183 இலங்கையர்கள்

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக அவுஸ்ரேலியாவிற்கு வந்த 183 இலங்கையர்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய கடல் எல்லைப் பாதுகாப்பின் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற பிராந்திய மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோத குடியேற்ற படகுகள் வருவதை தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தங்கள் நாட்டுக்கு வரும் அகதிகள் அனைவரையும் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக அவுஸ்ரேலியாவை சென்றடைய சுமார் 21 நாட்கள் ஆகும் என்றும் ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.



கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

## உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கும்

தேர்தல் சீர்திருத்தம் என்ற போர்வையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சித்தால்,தனித்தனி கட்சியாகவும்,கூட்டாகவும் கடுமையாக எதிர்ப்பது என ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டதோடு,அந்த முடிவின் பிரகாரம்,ஒரு பூர்வாங்க நடவடிக்கையாக அறிக்கையில் கையொழுத்திடப்பட்டது. இது தொடர்பான அறிக்கையில் கையெழுத்திட மக்கள் விடுதலை முன்னணி தனது முழு உடன்பாட்டையும் தெரிவித்துள்ளது. ஜனநாயகத்திற்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக மதத் தலைவர்கள்,சிவில் அமைப்புகள் மற்றும் தொழில் வல்லுநர்கள் உள்ளிட்ட தரப்பிற்கு தனித்தனியாக தெளிவூட்டுவதற்கும், மக்களுக்குத் தெளிவூட்டுவதற்கும்,அதற்கு அப்பால் இந்த தன்னிச்சையான செயல்முறை குறித்து சர்வதேச சமூகத்திற்கும் தெரிவிக்கவும் நடவடிக்கை எட்டப்பட்டுள்ளது.

## பச்சை நிற ஆப்பிள் பழத்தின் முதல் அறுவடை

தொடர்பில் தகவல்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி, ஆப்பிள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதை நேரில் வந்து பார்ப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் கூறினார். ஆப்பிள் விதைகளை இந்நாட்டுக்கு எடுத்து வந்து பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னரே பயிர்ச்செய்கையை முன்னெடுத்ததாகவும் இரண்டு ஏக்கரில் அறுவடை கிடைத்திருப்பதாகவும் விவசாயி லக்ஷ்மன் குமார தெரிவித்தார். இந்த விளைச்சலை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்து, அவற்றை விநியோகிப்பதற்கு முடியுமென்றும் இலங்கையில் எந்தவொரு இடத்திலும் இதற்கான பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் வகையிலேயே இந்த விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். விவசாயி கையளித்த பச்சை நிற அப்பிளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அதனை ருசி பார்ப்பதற்கும் மறக்கவில்லை. தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சம்பிகா பிரேமதாஸ் மற்றும் பீ.ஜே. அசங்க லயனல் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## செய்கடமை நிதியத்தை முடிவுக்குக் கொண்டுவர அனுமதி

நன்கொடையாளர்களிடம் கோரப்பட்டுள்ளது. கொவிட் 19 பெருந்தொற்றின்போது, நாட்டில் முன்னெடுக்கப்பட்ட சுகாதார பாதுகாப்புப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக நன்கொடையாளர்கள் அளித்த ஒத்துழைப்பிற்கு சுகாதார சமூக பாதுகாப்பு நிதியத்தின் செயலாளர் நன்றிகளைத் தெரிவித்துள்ளார். கொவிட் நிதிக்காக நன்கொடையாளர்களிடமிருந்து இருநூற்று இருபது கோடியே எழுபத்து ஒரு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து எழுநூற்று எண்பத்து ஐந்து ரூபா, ஐம்பத்தி எட்டு சதம் (ரூ. 2,207,164,785.58) கிடைக்கப்பெற்றுள்ளது.

பீ.சீஆர் பரிசோதனைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள், தேசிய தடுப்பூசி திட்டம், அவசர சிகிச்சை பிரிவுக்கு படுக்கைகள் கொள்வனவு மற்றும் மருந்து கொள்வனவு ஆகியவற்றுக்கான வசதிகளை வழங்க நூற்று தொண்ணூற்று ஒன்பது கோடியே எழுபத்தைந்து இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து நானூற்று ஐம்பத்தி ஆறு ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 1,997,569,456.56) இந்த நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. 2022 ஒக்டோபர் 18ஆம் திகதி கணக்கு மிகுதியின் பிரகாரம் கொவிட் நிதியில் இருபத்தி ஒரு கோடியே அறுபத்து எட்டு லட்சத்து எழுபத்தி ஏழாயிரத்து நானூற்று முப்பத்தொரு ரூபா (ரூ. 216,877,431.05) எஞ்சியுள்ளது. இதனை ஜனாதிபதி நிதியில் வைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மக்களுக்கு அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக அந்த நிதி பயன்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “போதையற்ற இலங்கை தேசத்தில் வினைத்திறன் மிக்க எதிர்கால சந்ததி”




**எம்.என்.எம். அப்ராஸ், நூருல் /ஹுதா உமர்**

அல்– மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா தனது 17வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொரோனா, பொருளாதார நெருக்கடிகள் உட்பட பல்வேறு காரணங்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தலைதூக்கியுள்ள போதைபொருள் பாவனை தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் “போதையற்ற இலங்கை தேசத்தில் வினைத்திறன் மிக்க எதிர்கால சந்ததி” வேலைத்திட்டத்தின் ஆரம்ப கட்டம் அல்– மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்காவின் தவிசாளர் யூ.எல்.என். /ஹுதா உமரின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது கமுஃ கமுஃ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலயம், மாளிகைக்காடு கமுஃ கமுஃ சபீனா முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் முதல் நாளும் மாளிகைக்காடு கமுஃகமுஃ அல்– /ஹுசைன் வித்தியாலயத்தில் இரண்டாம் இந்த “போதையற்ற இலங்கை தேசத்தில் வினைத்திறன் மிக்க எதிர்கால சந்ததி” வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. போதை பொருட்கள் தவிர்ப்பு, மாணவர்களின் உளவியல், உடலியல் மாற்றங்கள் தொடர்பிலான இந்த செயலமர்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.என்.எம்.தில்ஷான் பிரதான வளவாளராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு விளக்கமளித்தார். இந்நிகழ்வுகளில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அல்– மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா செயற்குழு ஊடக இணைப்பாளர் எம்.என்.எம். அப்ராஸ், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நாள்தோறும் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையை பார்வையிட
www.supeedsam.com

# பெருமை பேசி நாட்டை கட்டியெழுப்ப முடியாது சேவைதான் அவசியானது



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

நாட்டுக்குத் தேவை அடக்குமுறையல்ல எனவும்,அபிவிருத்தியே தேவை எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அரசாங்கம் அடக்குமுறையையே அமுல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். பெருமையடித்து நாட்டை கட்டியெழுப்ப முடியாது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இதயசுத்தியுடன் சேவை செய்வதே மேற்கொள்ள வேண்டியுள்ள தேவை எனவும் தெரிவித்தார். மக்களுக்கு தாம் வாழ்வதற்கான போராட்டமே உள்ளதாகவும்,தனது அதிகாரத்தைக் தக்க வைத்துக் கொள்வதான போராட்டமே அரசாங்கத்திற்குள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது பிள்ளைகளுக்கு சரியான உணவை வழங்கி கல்வியை வழங்குவதற்கே பெற்றோர்கள் போராடுவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அமைச்சர்களை நியமிப்பது தொடர்பான போராட்டமே அரசாங்கத்திற்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்நாட்டின் இளம் தலைமுறையினர் தொழில் செய்து தலை நிமிர்ந்து வாழ்வதற்கான போராட்டத்திலையே ஈடுபட்டுள்ள போது, அரசாங்கம் இளைஞர்களை ஒடுக்குவதாகவும், இந்நாட்டின் குழந்தைகள் அழகான நாட்டை உருவாக்க கனவு காணும்போது டீல் போட்டு பணம் சம்பாதிக்கும் போராட்டத்திலையே அரசாங்கம் ஈடுபட்டுவருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் மூச்சுத் திட்டத்தின் 53 ஆவது கட்டமாக மஹரகம பல் மருத்துவ நிருவனத்திற்கு 550,000 ரூபா பெறுமதியான பல் சத்திர சிகிச்சை உபகரணங்களை அன்பளிப்பு செய்யும் நிகழ்வு இன்று (19) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இடம்பெற்றது. நாட்டு மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள்,ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள்,உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் “ஜன சுவய” கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு ‘எதிர்க்கட்சியின் மூச்சு” நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர். இது வரை 53 கட்டங்களில் 160,266,900 ரூபா பெறுமதி வாய்ந்த மருத்துவமனை உபகரணங்கள் ஐக்கிய மக்கள் சக்தியால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாடு வீழ்ந்துள்ள பாதாளத்தில் இருந்து மீட்பதற்கு எந்நேரத்திலும் பட்டம் பதவிகள் இன்றி அரசாங்கத்திற்கு ஒத்துழைக்கத் தயார் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதற்கான உண்மையான விருப்பை அரசாங்கம் கொண்டிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். கொரோனா வைரஸால் நாடு கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த வேளையில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியினால் மூச்சுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இன்று இது மிகவும் வெற்றிகரமானதொரு வேலைத்திட்டமாக இயங்கி வருவதாகவும் தெரிவித்தார்.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**21276 | வே | 1993**
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**25090 | வே | 1990**
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

**21372 | வே | 1988**
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

**21297 | வே | 1987**
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 12

**25081 | பி | 1986**
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**20931 | வே | 1993**
கந்தர்மடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

**20733 | வி | 1992**
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**20538 | வே | 1989**
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சூ.செவ்: 08

**21102 | வே | 1987**
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**21321 | வே | 1993**
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சூ.செவ்: 09

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

**20706 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

**25102 | வே | 1989**
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சூ.செவ்: 03

**20850 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

**21324 | வே | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

**21033 | கோ | 1992**
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

**20874 | வே | 1994**
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சூ.செவ்: 10

**20619 | வே | 1991**
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

**21471 | வே | 1990**
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

**21333 | வே | 1985**
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

**20694 | வே | 1995**
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**20883 | வே | 1993**
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

**21444 | வே | 1991**
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

**21105 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சூ.செவ்: 07

**21300 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சூ.செவ்: 10

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சூ.செவ்: 06

**21132 | கோ | 1994**
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

**23749 | வே | 1993**
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ்: 06

**23821 | வே | 1998**
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

**20853 | கோ | 1999**
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# பட்டிருப்பு தேசிய பாடசாலையில் தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சிகள்



**அஸ்ஹர் இப்றாஹிம்**

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம், தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடியில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போட்டி நிகழ்வுகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள் வாசிகசாலை பொறுப்பாசிரியர்.வி.அருணாகரன் ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், வாசிகசாலை ஆளணியினர் ஆகியோரின் நெறிப்படுத்தலிலும் பாடசாலை முதல்வர் எம்..சபேஸ்குமார் அவர்களின் வழிகாட்டலிலும் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள் , ஆசிரியர்கள் , மாணவர்கள் , பாடசாலை கல்விசாரா உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் பயிரிடப்பட்ட மரக்கறி உற்பத்திகளின் அறுவடை



திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் பயிரிடப்பட்ட மரக்கறி உற்பத்திகளின் அறுவடை நேற்று(19) நடைபெற்றது. இதன்போது அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகள் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுக்கிடையே விற்பனைக்காக விடப்பட்டது. மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம அவர்களின் ஆலோசனைக்கமைய மாவட்டச் செயலகத்தில் "உணவு உற்பத்தியை விருத்தி செய்தல்" எனும் தொனிப் பொருளுக்கு இணங்க பயன்படுத்தப் படாமல் காணப்பட்ட பிரதேசத்தில் மாவட்ட விவசாயப் பிரிவு மூலம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனுடைய அறுவடை இதற்கு முன்னர் ஒரு தடவை நடைபெற்றுள்ளதுடன் இரண்டாவது தடவையான அறுவடையே இன்றைய தினம் நடைபெற்றது. மிளகாய், கத்தரி, தக்காளி மற்றும் கறிமிளகாய் ஆகிய மரக்கறிகள் இவ்வாறு அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை ஸஹிரியன்ஸ் பிரிமியர் லீக் கிரிக்கட் சமர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பம்

**அஸ்ஹர் இப்றாஹிம்**

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி ஸஹிரியன் பழைய நண்பர்கள் சம்மேளனம் **ZOFA** ஒழுங்கு செய்துள்ள மெற்ரோபொலிடன் ஸஹிரியன் பிரிமியர் லீக் சீசன் 2 பழைய மாணவர் கிரிக்கட் சமர் 2022 எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள பழைய மாணவர் கிரிக்கட் சமரில் லெஜன்ஸ் ஒப் ஸஹிரியன் 2014 , 16 ஸஹிரியன்ஸ் 2016 , யூ.இஸட்.எப்.ஏ **UZFA** 91, ஸஹிரியன்ஸ் 90, கிளாஸ் ஒப் 13. 2013, ஸஹிரியன்ஸ் வொல்ப் 2017, 91 மெட்ஸ் 2010, மெக்ஸ் சாஜர்ஸ் 2012, ரீம் வநயஅ 92 .2011, சுப்பர் வரீயர்ஸ் 2007, ரீம் **team** 99 . 2018, ஸஹிரியன்ஸ் விக்கிங்ஸ் 2015, ஸஹிரியன் வை.ரூ.கே **Y2K** .2000, கிளசிகல் ஸ°ரோ வண் **classical zero one** 2001, அலியார் ரெஜிமன்ட் 2004, ஸெஸ்டோ **ZESDO** 99. 1999, ஸஹிரியன்ஸ் லயன்ஸ் 2006, கஜபா 08. 2008, சுப்ப ஹீரோஸ் 97.1997, ஸஹிரியன்ஸ் 98.1998, ஸஹிரியன்ஸ் 92. 1992, ஸஹிரியன்ஸ் 90. 1993, நொட் அவுட் **NOT OUT** 92.1995, பவர் பிளேயர்ஸ் 96.1996, யுனைடெட் ஸஹிரியன்ஸ் 2.0. 2002, பெச் **Batch** 05. 2005, கிறிக் **crick** 90. 1990, ரீம் **team 2 K** 2011, பூம் பூம் ஸஹிரியன்ஸ் 2013 ஆகிய 29 பழைய மாணவர் அணிகள் பங்கேற்கவுள்ளன.

சம்பியன்களாக தெரிவு செய்யப்படும் அணிக்கு 25,000 ரூபா பணப்பரிசும் சாம்பியன் கிண்ணமும், இரண்டாம் இடத்தைப்பெறும் அணிக்கு 15,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளன.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் மெற்ரோபொலிடன் கல்லூரி தவிசாளரும், முன்னாள் கல்முனை மாநகர மேயரும், இக்கல்லூரியின் பழைய மாணவருமான கலாநிதி ஸிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாகவும், கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸஜ்துல் நஜீம் கௌரவ அதிதியாகவும், சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளரும் இக் கல்லூரியின் பழைய மாணவருமான என்.எம்.அப்துல் மலீக் மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் இக் கல்லூரியின் பழைய மாணவருமான எஸ்.எல்.சம்சுதீன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# முழு தேசத்தையும் திரும்பி பார்க்க வைத்தவர் சாதனை அதிபர் அருட் சகோதரி சிறிய புஷ்பம்

**பாராட்டு விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர் அமீர் புகழாரம்**



**( காரைதீவு சகா)**

கிழக்கு மாகாணத்தில் தலைசிறந்த அதிபர்களுள் ஒருவராக அம்பாறை மாவட்டத்திலிருந்து "குரு பிரதீபா" விருதுக்கு தெரிவுசெய்யப்பட்ட ஒரே ஒரு அதிபர் எமது அருட் சகோதரி சிறியபுஷ்பம். முழுத் தேசத்தையும் சம்மாந்துறை வலயத்தின் பக்கம் திரும்பிப் பார்க்கவைத்துள்ள அவரை வலயம் சார்பாக வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமையடைகிறேன். இவ்வாறு சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் மகா வித்தியாலய அதிபர் அருட் சகோதரி எம் .சிறியபுஷ்பம் "குரு பிரதீபா " விருது பெற்றமையை பாராட்டிக் கௌரவிக்கின்ற விழாவில் உரையாற்றிய சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எம் .எஸ். எஸ். அமீர் புகழாரம் சூட்டினார். இந்த விழா நேற்று(19) ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டது. முன்னதாக பாராட்டப்பட்ட அதிபரும் ,அதிதிகளும் வீதி ஊர்வலமாக பான்ட் வாத்தியம், மயில் நடனம் சகிதம் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிதர்சினி மகேந்திரகுமார், ஏஎல்.அப்துல்மஜீட், உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர்களான கே. ரத்னேஸ்வரன், எஸ். பிரகதீஸ்வரன் ,அதிபர் சங்க பிரதிநிதி கே. செல்வசிகாமணி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அங்கு பணிப்பாளர் அமீர் மேலும் பேசுகையில்..

சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் மகா வித்தியாலயம் கல்வியோடு பண்பாட்டு விழுமியங்களையும் ஊட்டி வளர்க்கிறது. கொரோனா காலகட்டத்தில் இப்பாடசாலை ச விழிப்புடன் இயங்கியதை அறிவோம். பொருத்தமான ஒருவருக்கு பொருத்தமான விருது கிடைக்கப்பெற்றதில் வலயம் பெருமை அடைகின்றது. சாதனை அதிபர் சகோதரி சிறிய புஷ்பம் அவர்களுக்கு வலயம் சார்பாகவும் ,பாடசாலை சார்பாகவும், சமூகம் சார்பாகவும், கோட்டம் சார்பாகவும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கி ஆளுயர மாலை சூட்டி பாராட்டி கௌரவித்தார்கள்.. ஆசிரியர்கள் இணைந்து விருந்துபசாரம் செய்தார்கள்.

# காரைதீவு 12இல் டெங்கு பரவல் தீவிரம்

## சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா அதிரடி தடுப்பு நடவடிக்கை

**( காரைதீவு சகா)**



காரைதீவு 12 ஆம் பிரிவில் அண்மைக்காலமாக டெங்கு நோய் மிகவும் தீவிரமாக பரவிவருகிறது. அதனைத் தொடர்ந்து, காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் விசேட டெங்கு தடுப்பு பணிகளும்,கிணறுகளில் மீன்கள் விடும் பணிகளும் அதிரடியாக மேற்கொள்ளப்பட்டன. மேலும் ,அலுவலக சுகாதார பணியாளர்கள் வீடுகளில் டெங்கு பரிசோதனை மேற்கொண்டபோது அதிகமான இடங்களில் நுளம்பு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்கு பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றி பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இரண்டு நாட்களுக்கு மேல் குடம், வாளி மற்றும் நீல நிற பரல்களில் நீரை சேமித்து வைக்க வேண்டாம். ஒவ்வொரு முறையும் நீர் சேமிக்கும் கொள்கலன்களை பூரணமாக கழுவி சுத்தம் செய்த பின்னரே மீண்டும் நீரை சேகரித்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் உங்கள் கிணறு நுளம்பு வலை இடல், நீர் சேமிக்கும் கொள்கலன்கள், மலசலகூட வாளி, சுற்றுப் புறங்களில் நீர் தேங்கும் இடங்களை அவதானியுங்கள். மேலும் அநேக வீடுகளின் வீட்டின் உட்பகுதியில் பின் வரும் இடங்களில் அதிகமான நுளம்பு குடம்பிகள் அவதானிக்கப்பட்டுள்ளன,

1)குளிர்சாதனப் பெட்டியின் பிற்பக்க நீர் தேங்கும் பகுதிகள்.
2)சமயலறையின் சிங் இன் கீழ்பக்க பகுதிகள்.
3)கூரையிலிருந்து கசிந்து வரும் மழைநீரை சேகரிக்க வைக்கும் பாத்திரங்கள்.
4)குளியலறையில் நீர் சேகரித்துவைக்க பாவிக்கப்படும் வாளிகள்.
5)நீர் தேங்கிநிற்கும் பூச்சாடிகள்.

எனவே மேற்குறிப்பிட்ட இடங்களில் அதிக கவனம் செலுத்தி நுளம்புகள் பெருக இடமளிக்காமல் சுத்தம் செய்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம் என்று கூறப்பட்டது. சுத்தம் செய்ய தவறும் பட்சத்தில் உரிமையாளருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது

இந்நிகழ்வில் அலுவலக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்,பொது சுகாதார பரிசோதகர்கள்,நுளம்பு களத்தடுப்பு பிரிவினர்கள்,காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள்,நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக நுளம்பு கள தடுப்புப் பிரிவினர்களும்,காரைதீவு 12 ஆம் பிரிவு கிராம உத்தியோகத்தர்,காரைதீவு பிரதேச சபை ஊழியர்களும் மற்றும் பொதுமக்களும் இணைந்து இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# உலருணவு பொருட்கள் வழங்கி வைப்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தலவாக்கலை பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலவாக்கலை ஸ்ரீசத்ய சாயி நிலையத்தினூடாக உலருணவு பொருட்கள் வழங்கப்பட்டன. தலவாக்கலை ஸ்ரீசத்ய சாயி நிலையத் தலைவர் திருமதி.கமலநாயகி , சாயி நிலைய பொதுச் செயலாளர் வைத்தியர் வே.கருணைராசன் ஆகியோர் இந்த பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.

# மட்டக்களப்பு மாநகரசபையில் இடம்பெற்ற கழிவு முகாமைத்துவம் தொடர்பான விசேட கலந்துரையாடல்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாநகரசபையின் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று மாநகர சபை கேட்போர் கூட மண்டபத்தில் மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் இன்று (20) திகதி இடம்பெற்றது. மாநகரசபை எல்லைக்குற்பட்ட திண்மக்கழிவுகளை அகற்றுவதில் உள்ள பாரிய இடர்பாடுகள் மற்றும் திண்ம கழிவினை உரிய முறையில் அகற்றுவதற்கான புதிய இடத்தினை அடையாளப்படுத்துவதில் உள்ள தாமதம் போன்ற விடயங்கள் தொடர்பாக இதன் போது விரிவாக ஆராயப்பட்டதுடன், எதிர்வரும் மூன்று மாத காலத்திற்குள் நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இதன்போது அனைத்து திணைக்களங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், இக்குழுவானது ஒரு வார காலத்திற்குள் திண்மக்கழிவு அகற்றுவதற்கான தற்காலிக தீர்வொன்றினை பெற்றுக்கொடுப்பதற்காக இக்குழு செயற்படுவதுடன், திண்மக்கழிவகற்றுவதற்கான நிரந்தர தீர்வினை மிக விரைவாக மட்டக்களப்பு மாநகர சபை பெற்றுக்கொடுக்கு மென இதன்போது தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர ஆணையாளர் என்.மதிவண்ணன், மாநகர பிரதி ஆணையாளர் யூ.சிவராசா, வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாத்தா குலேந்திரகுமார், மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி வைத்தியகலாநிதி இ.உதயகுமார், மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.அமிர்தலிங்கம் மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சுதர்சன் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட மேலும் பலர் இதன்போது கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கத்தாரில் தமிழர்களின் கலாசார சங்கமம்




**நூருல் /ஹுதா உமர்**

இந்திய தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கத்தார் ஒருங்கிணைந்த தமிழர் பேரவை நடாத்திய மாபெரும் தமிழ் கலாச்சார சங்கமம் விழா சிறப்பாக நடாத்த உதவிய உள்ளங்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு நேற்று கத்தார் இந்திய சமூக நல மன்றத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு ஊடக அனுசரணை வழங்கிய ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பை கௌரவிக்கும் முகமாக ஸ்கை தமிழ் ஊடகம் சார்பாக ஊடகத்தின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், டி.வி.எஸ் ஹைதர் குரூப் பணிப்பாளர் ஹைதர் அலி, அல்டிமேட் டிரேடிங் ரூ கான்ட்ரேஷன் பணிப்பாளர், திரு.சக்திவேல் மகாலிங்கம், மங்கள் மற்றும் மங்கை பண்ணை வீடு ரியல் எஸ்டேட் பணிப்பாளர் டாக்டர் வினி சுரீராஜ் பிரியங்கா சுரேஷ், ஸ்கை தமிழ் ஊடகத்தின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி, ஒருங்கிணைந்த தமிழர் பேரவை தலைவர் சமீர் அகமது, செயலாளர் வலியுல்லாஹ், நிகழ்ச்சி இயக்குனர் சக்திவேல், பேரவை நிர்வாகிகள் மற்றும் அனுசரணையாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சமுர்த்தி வங்கிகளை பலப்படுத்த வேண்டும்



## - கித்சிரி கமகே -

**வவுணதீவு எஸ். சதீஸ்**

அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய ஆராச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் பிரதேச செயலகங்களில் சந்தித்தனர். இச் சந்திப்பின் ஓர் அங்கமாக புதன்கிழமை பிற்பகல் (19) மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பு அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய ஆராச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் கித்சிரி கமகே தலைமையில் வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது நலன்புரி நன்மைகள் சபை ஊடாக வெளியிடப்பட்ட விண்ணப்பப் படிவம் தொடர்பிலும், வங்கி ஊடாக வழங்கப்படும் முதியோர் கொடுப்பளவு, விஷேட தேவையுடையோர் கொடுப்பளவு தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் நடவடிக்கை எடுக்க தேசிய சங்கம் நடவடிக்கை எடுத்துவருவதா இதன்போது தலைவர் கித்சிரி கமகே தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துவெ தெரிவிக்கையில், பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தபால் நிலையங்கள் பலவற்றில் தமது வசிப்பிடத்தின் அண்மையில் இருந்து முன்னர் வயோதிபர்கள் பணம் பெற்று வந்தனர் ஆனால் தற்போது தூ ர இடங்களிலிருந்து கூடிய பணம் செலவு செய்து வங்கிகளில் பணம் பெறவேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதேவேளை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வெளிக்களத்தில் சென்று பணம் வழங்குவது போதிய பாதுகாப்பு இல்லை. இது அவ் உத்தியோகத்தர்களின் தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இது தொடர்பிலும் தாம் உரிய தரப்பினருடன் எழுத்துமூலம் அறிவித்து கலந்துரையாடப்பட்டுள்ளது

எமது சமுர்த்தி வங்கிகளை மேலும் பலப்படுத்த நாம் அற்பணிப்புடன் செயலாற்ற வேண்டிய தேவை உள்ளது. எதிர்காலத்தில் வங்கிகளில் வரியில் நின்று பணம் பெறும் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது நேக்கம். இந்நிகழ்வில் அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய ஆராச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் உப செயலாளர் உப்புல், வவுணதீவு பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் நிமலானந்தம், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது

## அங்கஜன் எம்.பி

**த.சுபேசன்**

தீபாவளியை முன்னிட்டு நீண்ட காலமாக சிறைகளில் வாடிய தமிழ் அரசியல் கைதிகள் 8பேரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய தீர்மானித்திருப்பது உறவுகள் மனதில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையொட்டி ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்து வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் தனது அறிக்கையில் கடந்த 30ஆண்டு கால உள்நாட்டு யுத்தத்தால் நாட்டு மக்கள் அனுபவித்த இன்னல்கள் ஏராளம்.அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் யுத்தம் மௌனித்து பன்னிரெண்டு வருடங்கள் கடந்தும் நிம்மதியாக வாழ முடியாத ஓர் சூழலில் வாழ்கின்றனர். முப்பது ஆண்டு கால யுத்தத்தால் ஏராளம் உறவுகளை பறி கொடுத்தும்–பிரிந்தும் வாழ்பவர்கள் தமிழ் உறவுகள். காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியும்–சிறைகளில் வாடுபவர்களை எண்ணியும் எமது உறவுகள் அவர்களின் வாழ்நாளில் பெரும்பகுதியை கழித்து வருகின்றனர்.

மரணத்தின் போது பிள்ளையின் முகம் காணாது எத்தனையோ தாய்–தந்தையர்கள் உயிரை விட்டுள்ளனர்.இன்னும் பலர் தமது பிள்ளை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இன்றும் உயிரை கையில் பிடித்து வைத்துள்ளனர். இந் நிலையில் ஜனாதிபதி பொது மன்னிப்பு அடிப்படையில் அரசியல் கைதிகளான வரதராஜன்,ரகுபதி சர்மா,இலங்கேஷ்வரன், நவதீபன், ராகுலன்,காந்தன்,சுதா மற்றும் ஜெபநேசன் ஆகிய எட்டு பேரை விடுவிக்கவிருப்பது காத்திருக்கும் உறவுகளுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.நல்லாட்சி காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தாங்களும் இணைந்து பல அரசியல் கைதிகளை விடுதலை செய்திருந்தமை அனைவரும் அறிந்த ஒன்றே.



எஞ்சியிருக்கும் அரசியல் கைதிகளையும் சட்டத்தின் ஊடாகவோ அல்லது பொது மன்னிப்பு அடிப்படையிலோ விடுவித்து காத்திருக்கும் உறவுகளின் நம்பிக்கையை நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். முதற்கட்டமாக 8அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு உறவுகள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.என மேலும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

# வானம் பார்க்கும் ஓட்டமாவடி பொதுநூலகம்



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

வானம் தெரியும் நிலையில் ஓட்டமாவடி பொதுநூலக கட்டடம் சேதமடைந்து காணப்படுகிறது. கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகத்தின் கீழுள்ள ஓட்டமாவடி பொதுநூலகக் கட்டடமே இவ்வாறு மிக நீண்ட காலமாக காட்சியளிக்கிறது. கூரைகள் உடைந்தும் கதவுகள் சேதமடைந்த நிலையிலும் காணப்படும் இக் கட்டடத் தொகுதி புறாக்களின் வசிப்பிடமாக மாறி வருகிறது. தாய், சேய் நிலையம் அமைந்துள்ள இக் கட்டடத் தொகுதிக்கு குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் பல்வேறு அசௌகரியங்ளை எதிர்நோக்குகின்றனர். அத்துடன், எதிர்வரும் நாட்கள் மழை காலம் என்பதால் கூரைகள் வழியாக கட்டடத்துக்குள் மழைநீர் தேங்கி நின்று கட்டடம் இன்னும் பாரிய சேதங்கள் ஏற்படும் நிலையும் காணப்படுகிறது. எனவே, இதனை பிரதேச சபை நிர்வாகத்தினர் கவனமெடுத்து புனர்நிர்மாணம் செய்ய வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.




# கருமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா



**எப்.முபாரக்**

திருகோணமலை கருமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில்வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று வரலாற்றுச் சாதனை புரிந்த மாணவியையும், குறித்த பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் சிறந்த அடைவு மட்டத்தினை வெளிப்படுத்திய மாணவர்களையும் மற்றும் ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை (19) பாடசாலை அதிபர் கே.எம்.எம்.நவாஸ் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது வெற்றிச் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

அத்தோடு புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் (157) பெற்று சித்தியடைந்து வரலாற்றுச் சாதனை படைத்த என். அதா சரீஹ் என்ற மாணவிக்கு கருமலையூற்று ஜ/ம்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபையின் முன்னை நாள் தலைவர் எம்.எஸ்.எம். ஆசாத் என்பவரால் துவிச்சக்கர வண்டி ஒன்றும் நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் மற்றும் கல்வி அதிகாரிகள்,பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# கல்முனையில் உலக நோயாளர் பாதுகாப்பு தினம்



**( வி.ரி. சகாதேவராஜா)**

உலக நோயாளர் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் நேற்று (19)உலக நோயாளர் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் இந்தவருட நோயாளர்கள் பாதுகாப்பு தினத்தின் குறிக்கோள்களையும் இலக்குகளையும் நோக்காக கொண்டு பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதி வைத்திய அதிகாரிகளான டாக்டர் ஜே.மதன், டாக்டர் எஸ் .ராஜேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து "மெடிகேஷன் சேஃப்டி" என்ற தொனிப் பொருளில் கருத்துரைகளை வைத்திய நிபுணர்களான என். உதயகுமார் டாக்டர் எம்.சமீம் டாக்டர் முஸ்தபா இக்ரம் டாக்டர் எஸ் எம்.றொசாந்த் டாக்டர் எஸ் .எம் .ரசீன் மொஹமட் ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள். நிகழ்ச்சிகளை சிரேஸ்ட தாதிய உத்தியோகத்தர் எஸ்.சிறிகரன் தொகுத்து வழங்கினார்

# நடமாடும் சேவை





**ஹஸ்பர்**

பிறப்பு சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் (18)இடம் பெற்றது.
பல வருட காலமாக பிறப்பு சான்றிதழின்றி வாழ்ந்து வந்த சுமார் 112 நபர்களுக்கு இதன் போது உத்தேச சான்றிதழ்,பிறப்பு சான்றிதழ் போன்றன வழங்கி வைக்கப்பட்டன. மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்கும் பொருட்டு இவ் நடமாடும் சேவை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,மாவட்ட பதிவாளர் சமன் குமார ,மேலதிக மாவட்ட பதிவாளர் அஸ்வர்,நிருவாக உத்தியோகத்தர் உடகெதர ,கிராம உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோணேஸ்வரர் ஆலயத்தின் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராக

# கண்டன பிரேரணை நிறைவேற்றம்



(ரக்ஸனா)

கிழக்கு மாகாணத்திலுள்ள மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாக திருகோணமையில் அமைந்துள்ள கோணேஸ்வரர் ஆலயம் திகழ்கின்றது. இந்நிலையில் அவ்வாலயம் தொல்பொருள் என்ற போர்வையில் ஆலயத்தின் கட்டுமானப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன, அங்கு ஆக்கிரமிப்புக் கடைகளால் ஆலயத்தின் புனிதத்தன்மை பாதிக்கப்படுகின்றன. இவைகளையெல்லாம் இந்த அரசாங்கம் சட்டத்திற்கு மாறாக அனைத்தையும் மூடிமறைத்து, இந்து மக்களையும் மூடி மறைப்பதற்கும் அரசு முயல்கின்றது. தமிழர்களை ஆக்கிரமிப்புச் செய்கின்ற செயற்பாடு கிழக்கில் மாத்திரமின்றி வடக்கிலும் நடந்தேறி வருகின்றன. எனவே கோணேஸ்வரர் ஆலயத்தின் மீதான ஆக்கிரமிப்புக்கு நாம் இச்சபையில் கண்டன பிரேரணை நிறைவேற்றுகின்றோம். என மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று – களுதாவளை பிரதேச சபைத் தவிசாளர் ஞானமுத்து யோகநாதன் தெரிவித்துள்ளார்.

மேற்படி சபையின் 56 வது சபை அமர்வு களுதாவளையில் அமைந்துள் பிரதேச சபையில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது சபைக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பொருட்களுக்கு ஒரு நாளைக்கு ஒவ்வொரு விலைவாசியாக எமது எதிர்காலம் பூச்சியத்தில்தான் போய்கொண்டிருக்கின்றது. எமது சபையால் 2022 இற்கு முன்மொழியப்பட்ட வரவு செலவுத்திட்ட வேலைகளில் 50 வீதமான வேலைகள் இதுவரையில் மேற்கொள்ளப்படாமலுள்ளன. இந்நிலையில் 2023 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தைத் தயார்படுத்த வேண்டியுள்ளது. வருகின்ற மழைகாலத்திற்கு பாவிப்பதற்காக வேண்டிய பழுதடைந்துள்ள ஜே.சி. பி வாகனத்தை திருத்த வேண்டும். உலக வங்கியால் களுவாஞ்சிகுடி பொதுச்சந்தையில் கட்டப்பட்ட மீன் சந்தைத் தொகுதியை இம்மாத்திற்குள் திந்நுவைக்க வேண்டும். அதனைப் பார்வயிடுவதற்கு உலக வங்கி பிரதிநிதிகள் எதிர்வரும் முதலாம் திகதி வரவுள்ளார்கள். இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில்தான் எதிர்காலத்தில் மேலும் பல செயற்றிட்டங்கள் எம்மை நாடி வரும். தற்போதைய நிலையில எமது சபையில் உள்ள நிதி போதாதுள்ளது ஆனாலும் அரசாங்கமும் எமக்கு எதுவித ஒதுக்கீடுகளையும் மேற்கொள்ளவில்லை. எனவே உலக வங்கி மூலம்தான் உதவிகளைப் பெற்று கிராமங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. மகிழூரில் அமைக்கப்பட்டு வருகின்ற கலாசார மண்டபம இதுவரையில் முடிக்கப்படாமலுள்ளன. அக்கட்டடத்திற்குரிய மிகுதி நிதியை விரைவாக வழங்குதவற்கு நடவடிக்கை எடுப்பதாக ஆளுனர் தெரிவித்திருக்கின்றார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் திட்டமிடல் இல்லாமல் அமைக்கப்பட்ட விதிகள் அனைத்தும் தற்போது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் அனைத்து கிராமங்களிலும் வீதிகள், வீடுகளும், வெள்ளத்தில் தாழும் நிலமை ஏற்படும். இதனால் வருகின்ற மழை வெள்ளத்தில் மக்கள் பாதிப்படையும்போது அனைத்து விடைங்களும். எமது பிரதேச சபைக்குத்தான் வரவுள்ளது. எனவே அனைத்திற்கும் எமது சபை தயாராக இருக்க வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார். மேலும் இச்சபை அமர்வில் களுவாஞ்சிகுடி பொது மைதானத்தின் ஒரு பகுதியில் மாதுளை செய்கைக்குரிய கட்டடம் கட்டுவதற்குரிய அனுமதியை வழங்குவதில்லை, மிக நீண்ட காலமாக பழுதடைந்த கிடக்கும் ஜே.சி.பி வாகனத்தை திருத்துதல், 2023 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்தல், சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு விடுவதற்கு குத்தகைக்கு விடுதல், பயிலுனராக வரும் உத்தியோகஸ்த்தர்களுக்கு கொடுப்பனவு வழங்குதல், களுவாஞ்சிகுடி பொதுச்சந்தைத் தொகுதியில் புதிதாக கட்டப்பட்ட மீன் சந்தைத் தொகுதியை எதிர்வரும் முதலாம் திகதி காலை வேளையில் திற்து வைத்தல், போன்ற பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன்போது பிரதேச சபை நிருவதாகத்தால் சபைக்கு முன் வைக்கப்பட்ட மாதாந்த கணக்கறிக்கை சபை உறுப்பினர்களால் அனுமதி வழங்கப்படவில்லை. இந்நிலையில் கடந்த பிரதேச சபை அமைர்வில் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் தொடர்பில் தான் தெரிவித்த கருத்துக்கு எதிராக, தவிசாளருக்கு எதிராகவும், தனக்கு திராகவும், மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் 100 மில்லியன் ரூபா நஸ்ட்ட ஈடு கோரி வழக்குத்தாக்கல் செய்துள்ளதாக இதன்போது மே.வினோராஜ் சபையில் தெரிவித்தார். தொடர்ந்து வீதி, மயானம், உள்ளிடடபல பிரச்சனைகள் தொடர்பில் விவாதிக்கப்பட்டதோடு வாத பிரதிவாதங்களும், இடம்பெற்று சபை அமர்வு நிறைவு பெற்றது

## பேசாலை கத்தோலிக்க ஒன்றிய இளைஞர் அழைப்பில் ஒன்றுகூடிய புத்திஜீவிகள்





( வாஸ் கூஞ்ஞ)

இன்று நாட்டில் பல இடங்களில் இளைஞர்களுக்கு நல்வழி காட்டப்படாமையால் பிரச்சனைகள் தலைதூக்கி வருவதை கவனத்தில் எடுத்துக்கொண்ட பேசாலை கத்தோலிக்க ஒன்றிய இளைஞர் மன்றமானது பேசாலை பகுதியிலுள்ள புத்திஜீவிகளை ஒன்றுக்கூட்டி அவர்களிம் தங்கள் எண்ணங்களை முன்வைத்த நிகழ்வு இடம்பெற்றது. இவ் நிகழ்வானது ஞாயிற்றுக்கிழமை (16) புனித வெற்றிநாயகி ஆலய முன்றலில் பேசாலை கத்தோலிக்க ஒன்றிய இளைஞர் மன்றத்தின் தலைவர் எம் சுமித் தலைமையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்




## அகில இலங்கை முஸ்லிம் லீக் நடாத்திய கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியீடு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு முப்பத்தொரு ஆண்டுகள் நிறைவு பெறுவதனையிட்டு, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் நடாத்திய கட்டுரைப் போட்டியின் முடிவுகளை சம்மேளனம் வெளியிட்டுள்ளது. இப்போட்டியானது "வட மாகாண முஸ்லிம்களின் இன்றைய அவல நிலையும், அதில் இருந்து தீர்வை நோக்கி' எனும் தலைப்பில் நடாத்தப்பட்டது. இதில், ஏ.எஸ்.பர்ஹானா, பாலாவி புத்தளம் (சான்றிதழும் ரூபா 15,000 ரூபா பணமும்) முதலாமிடத்தையும், கே.எல்.எம் ஜாபிர், ஓட்டமாவாடி (சான்றிதழும் ரூபா 10,000 பணமும்) இரண்டாமிடத்தையும், ரிஸ்மியா ஹமீத், தெல்தோட்டை (சான்றிதழும் ரூபா 5000 பணமும்) மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

சுமார் 50க்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றிய இப்போட்டியில், மாஜிதா கமால்டீன், எம்.ஜே.எம். ஜாவித் ஹக் – மாவடிச்சேனை, வாழைச்சேனை – 05, யோகராஜா மோகதாஸன், வாழைச்சேனை, ரீ.எம். தாய்க் – கல்பிட்டி ஆகிய நான்கு பேருக்கு விசேட ஆறுதல் பரிசான சான்றிதழ் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளதோடு, போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. இவர்களுக்கான பரிசளிப்பு விழா விரைவில் கொழும்பில் நடைபெறும் என சம்மேளனத்தின் தலைவர் லுக்மான் சஹாப்தீன் தெரிவித்தார்.

## 3ஆம் இடத்தை பெற்ற கிரிக்கெட் அணி



வி.சுகிர்தகுமார்

நடைபெற்று முடிவடைந்த கிழக்கு மாகாண மாகாண மட்ட விளையாட்டு விழாவில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான நீளம்பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று பெருமை சேர்த்த அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ணமிசன் மகா வித்தியாலய மாணவன் த.ஜனுஜன் மற்றும் ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மாகாண மட்டத்தில் 3ஆம் இடத்தை பெற்ற கிரிக்கெட் அணி மாணவர்களும் அதிபர் ஆசிரியர் உள்ளிட்ட கல்வி சமூகத்தால் இன்று பாராட்டி கௌரவிக்கப்பட்டார். திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆலையடிவேம்பு கல்வி கோட்ட அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ணமிசன் மகா வித்தியாலய மாணவர்களே இவ்வாறு பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாடாசலையின் அதிபர் திருமதி ஆர். நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற பாராட்டு விழாவானது பாடசாலையின் பிரதான வீதியில் இருந்து ஆரம்பமானது. அங்கு பாண்ட் வாத்திய குழுவினரின் வரவேற்பு இசையோடு ஆரம்பமான கௌரவிப்பு நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் கே.தங்கவடிவேல் உதவி அதிபர் ந.நேசராஜா உள்ளிட்ட ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் என பலரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து அங்கிருந்து ஆசிரியர்கள் மாணவர்கள் சகிதம் வெற்றி பெற்ற மாணவர்கள் பாடசாலைக்கு அழைத்து செல்லப்பட்டதுடன் வீதி ஓரங்களில் காத்திருந்த மாணவர்கள் வாழ்த்தி வரவேற்றனர்.

இதேநேரம் பாடாசலையின் நுழைவாயிலில் சக மாணவர்களால் உற்சாக வரவேற்பளித்திருந்தமை சிறப்பம்சாக அமைந்திருந்தது. இதன் பின்னராக பாடசாலையின் ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அதிபர் உள்ளிட்டவர்களால் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பயிற்சி அளித்த ஆசிரியர்களுக்கும் வாழ்த்துரை வழங்கப்பட்டது. தொடர்ந்து வெற்றி பெற்ற கிரிக்கெட் அணியினருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கி வைக்கப்பட்டதுடன் தங்கப்பதக்கம் வென்ற மாணவன் அதிபர் உள்ளிட்டவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாக அமைந்தது.

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த செய்திமடல் வெளியீடு



நூருல் /ஹுதா உமர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2021ஆம் ஆண்டிற்கான செய்தி மடல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட மூன்றாவது செய்திமடல் இதுவாகும். செய்திமடலின் இணை ஆசிரியர் பேராசிரியர் ஏ.எம். முஷாதிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பல்கலைக்கழக நிருவாகக் கட்டிடத் தொகுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வில், செய்திமடலின் இணை ஆசிரியர் பேராசியர் ஏ.எம். முஷாதிக் வரவேற்புரையினை நிகழ்த்தினார்.

நிகழ்வில் பிரதம அதிதி உரையினை ஆற்றிய உபவேந்தர், செய்திமடலின் இணை ஆசிரியர்களான பேராசிரியர் ஏ.எம். முஷாதிக் மற்றும் பல்கலைக்கழக நூலகர் எம்.எம். ரிபாயித்தீன் ஆகியோர் உள்ளடங்கலான பதிப்பாசிரியர்கள் குழுவினருக்கு நன்றி கூறியதுடன், நாட்டின் பொருளாதார நிலையினைக் கருத்திற்கொண்டு மேற்படி செய்திமடல் இலத்திரனியல் வடிவில் வெளியிடப்படுவதாகக் குறிப்பிட்டார். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிப் போக்கினை சமூகத்திற்குக் கொண்டு செல்வதற்கான ஒரு சிறந்த ஆவணமாக இச்செய்திமடல் அமையும் என்று தான் எதிர்பார்ப்பதாக உபவேந்தர் குறிப்பிட்டார். கடந்த காலத்தில் ஏற்பட்ட கொவிட் அசாதாரண சூழ்நிலை காரணமாக செய்திமடலினை உரிய காலத்திற்குள் வெளியிட முடியாமற் போனமையினையும் உபவேந்தர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

செய்திமடல் வெளியீட்டு விழா நிகழ்வில் உபவேந்தருடன் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பீடாதிபதி, செய்திமடலின் இணை ஆசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், பல்கலைக்கழக நிருவாகப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளர், பதில் நிதியாளர், துறைத் தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மக்களின் பங்குபற்றலோடு திட்டங்களைத் தீட்டும்பொழுது வெற்றியளிக்கும்

## தம்பலகாமம் பிரதேச சபைத் தலைவர் ஏ.ஜி. சம்பிக்க பண்டார



(ரக்ஸனா)

எப்பொழுதுமே மக்களின் பங்குபற்றலோடு ஆலோசனைகளோடு ஒத்துழைப்போடு திட்டங்களைத் தீட்டும்பொழுது அது வெற்றியளிக்கும் தம்பலகாமம் பிரதேச சபைத் தலைவர் ஏ.ஜி. சம்பிக்க பண்டார. அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டத் தயாரிப்பை மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்டு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக வெளிப்படைத் தன்மையோடு செய்யப் போகின்றோம் என தம்பலகாமம் பிரதேச சபைத் தலைவர் ஏ.ஜி. சம்பிக்க பண்டார தெரிவித்தார். பிரதேச மக்களது திட்ட முன் மொழிவுகளை உள்வாங்கி வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பயிற்சிச் செயலமர்வு திங்கள் செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் தம்பலகாமம் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த பயிற்சிச் செயலமர்வில் அப்பிரதேச சபைத் தலைவர் ஏ.ஜி. சம்பிக்க பண்டார, செயலாளர் பி.யூ.ஏ.எஸ். உடகெதர, பிரதேச சபை முன்னாள் தலைவர் ஏ.ஏ. வாஹித் உட்பட பிரதேச சபையின் தற்போதைய உறுப்பினர்கள், வட்டாரங்களிலுள்ள சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சன சமூக நிலைய உறுப்பினர்கள், பெண்கள் இளைஞர் அமைப்புக்களின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சிச் செயலமர்வை ஆரம்பித்து வைத்து மேலும் உரையாற்றிய பிரதேச சபையின் தவிசாளர்

எப்பொழுதுமே மக்களின் பங்குபற்றலோடு ஆலோசனைகளோடு ஒத்துழைப்போடு திட்டங்களைத் தீட்டும்பொழுது அது வெற்றியளிக்கும். அத்துடன் பிரதேச சபை நிருவாகத்திற்கும் மக்களுக்குமான தொடர்பாடல் சிறந்ததாக இருக்கும் பொழுது பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது இலகுவாக இருக்கும். அதனால் மக்களும் மிகுந்த நன்மை அடைவார்கள். பிரதேச சபையும் வலுப்பெறும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக நிதி அனுசரணை செய்து பயிற்சிகளை வழங்குவதையும் சமூக மட்ட அமைப்புக்களையும் சிவில் சமூகத்தையும் இணைப்பாக்கம் செய்வதிலும் இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பு ஈடுபட்டுள்ளது. எனவே ஒட்டு மொத்த தம்பலகாமம் பிரதேச மக்களின் சார்பில் அந்த அமைப்பினருக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும் என்றார்.

பயிற்சிச் செயலமர்வின் இறுதியில் மக்கள் பங்கேற்புடனான வரவு செலவுத் திட்டத்திற்காக பிரதேச மக்களால் முன்னுரிமை அடிப்படையில் தேவைகள் அடையாளம் காணப்பட்டு தம்பலகாமம் பிரதேச சபை தலைவர் உறுப்பினர் உள்ளிட்ட நிருவாகத்தினரிடம் சமர்ப்பிக்கப்பட்டன. இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் வேலாயுதம் மோகனின் இணைப்பாக்கத்தில் இடம்பெற்ற இப்பயிற்சிச் செயலமர்வில் உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட சமூக அபிவிருத்தி அலுவலர் சட்டத்தரணி அன்பழகன் குறூஸ் வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார். யூ.எஸ். எய்ட் சர்வதேச உதவி அமைபபு இத்திட்டத்திற்கு நிதி அனுசரணை வழங்கி வருகின்றது. பிரதேச சபைகளுக்குக் கிடைக்கக் கூடிய நிதி, அச்சபை கொண்டுள்ள பௌதீக, மனித வளங்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தி பிரதேச மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டமாக இந்த செயலமர்வுகளை இளைஞர் அபிவிருத்தி அகம் தன்னார்வ உதவு ஊக்க அமைப்பு நடத்தி வருகின்றது.

# கிழக்கு மாகாண வரலாற்றில் முதல்தடவையாக இடம்பெற்ற மாகாண மட்ட அழகியல் தின போட்டி





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கு மாகாண வரலாற்றில் முதல்தடவையாக இடம்பெற்ற மாகாண மட்ட அழகியல் தின போட்டியின் பிரதான ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பு மகாஜன கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று (20) திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது. கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் அழகியல் பாடங்களுக்கான உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதரனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி.நகுலேஸ்வரி புள்ளநாயகம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் திருமதி.குலேந்திரகுமார் சுஜாதா, மாகாண பிரதிக்கல்விப் பணிணிப்பாளர் (திட்டமிடல்) ஆர். நிர்மலரஞ்சன், மாகாண கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள், வலயக் கல்விப் பிரதிப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், மகாஜன கல்லூரியின் அதிபர் அருமைராஜா, ஆசிரிய ஆலோசகர்கள், நடுவர்கள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதியதிபர்கள், ஆசிரியர்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர். தமிழ் பண்பாட்டு கலாசார வாத்தியங்கள் இசைத்து அதிதிகளுக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து பிரதான நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில், தமிழ்த்தாய் வாழ்த்து, இறைவணக்கம் என்பன இடம்பெற்று, மாணவர்களின் வரவேற்பு நடனம், சிறப்பு அதிதிகள் உரை, மேலும் பல மாணவர்களது கண்கவர் ஆற்றுகைகள் என்பவற்றை தொடர்ந்து பிரதம அதிதி உரை இடம்பெற்றிருந்தது.

அதனைத் தொடர்ந்து அழகியல் தினப் போட்டிகளில் நடுவனம் வகிக்கவுள்ள நடுவர்களுக்கான அறிவுறுத்தலின் பின்னர் போட்டி நிகழ்வுகள் ஆரம்பமாகி இடம்பெற்றுள்ளது. கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இதன்போது ஆர்வத்துடன் போட்டிகளில் பங்கேற்றிருந்தனர். இக் கிழக்கு மாகாண மட்ட அழகியல் தின போட்டியில், கோட்ட மட்டங்களில் வெற்றிபெற்று, மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்கள் இதில் கலந்துகொண்டதுடன், இதில் குழு நடனம், தனி நடனம் மற்றும் குழுப்பாடல், தனிப்பாடல் ஆகிய போட்டிகள் இடம்பெற்று வருகின்றது.

அதேவேளை நாளையும் இப்போட்டி நிகழ்வுகள் மகாஜனா கல்லூரியில் இடம்பெறவுள்ளதுடன், சிங்கள மொழி மூல மாணவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் தெய்யத்தகண்டியிலும், முஸ்லிம் மாணவர்களுக்கான சங்கீத போட்டிகள் எதிர்வரும் 29 திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதே வேளை இம் மாகாண மட்ட போட்டிகளில் வெற்றியீட்டும் பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்ட போட்டிகளில் பங்கேற்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கிராமத்திற்குள் புகுந்த இராட்சத முதலை மடக்கிப்பிடிப்பு



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர்பிரிவுக்குபட்ட மகிழூர்கண்ணகிபுரம்பகுதியில்வியாழக்கிழமை(20) கிராமத்திற்குப் புகுந்த இராட்சத முதலை ஒன்றை வனஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரிகள் அப்பகுதி மக்களின் உதவியுடன் மடக்கிப்பிடித்துக் கொண்டு சென்றுள்ளனர். மட்டக்களப்பு வாவியிலும், அதனை அண்டிய சிறு குளங்களைிலும் முதலலைகளின் அட்டகாசங்களும், தாக்குதல்களும், மீனவர்களையும், குளத்தில் மேச்சலுக்குச் செல்லும் கால்நடைகளையும் தாக்கிவரும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. இந்நிலையில் வியாழக்கிழமை அப்பகுதியிலுள்ள குளத்திலிருந்து கிராமத்திற்கு முதலை ஒன்று புகுந்துள்ளது. இதுகுறித்து வன ஜீவராசிகள் பாதுகாப்பு காரியாலயத்திற்கு அப்பகுதி மக்கள் அறிவித்துள்ளனர். உடன் ஸ்த்தலத்திற்கு விரைந்த அப்பகுதி வன ஜீவராசிகள் பாதுகாப்பு பொறுப்பதிகாரி ப.ஜெகதீஸ்வரன், மற்றும் வன உத்தியோகஸ்த்தர்களான வி.ஜெயசாந், எஸ்சிறிதரன், என்.நதீஸ், உள்ளிட்ட குழுவினர் அப்பகுதி மக்களின் உதவியுடள் முதலையை மடக்கிப் பிடித்துள்ளனர். சுமார் 8 அடி நீளமுள்ள இராட்சத முதலை ஒன்றை கிராமத்தினுள் இருந்து தமது குழுவினர் மடக்கிப் பிடித்துள்ளோம். இதனை தாம் ஏற்றிக் கொண்டு கல்லோயா சரணாலயத்திலுள்ள குளத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வெல்லாவெளி மற்றும் களுவாஞ்சிகுடி பகுதிகளுக்குப் பொறுப்பான வன ஜீவராசிகய் பாதுகாப்பு பொறுப்பதிகாரி ப.ஜெகதீஸ்வரன் இதன்போது தெரிவித்தார்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# கதிரைகளை சூடாக்குவதற்கான பயணப்பாதை இதுவல்ல

## பூ.பிரசாந்தன்





(ரக்ஸனா)

மக்களின் வாக்குகளை பெற்று நாடாளுமண்றம் சென்று கதிரைகளை சூடாக்கிக் களிப்பதற்கான பயணப்பாதை அரசியல் பாதை அல்ல யுத்த வடுக்களை சுமந்த நலிவடைந்துள்ள சமூகத்தின் மத்தியில் நம்பிக்கையினை கட்டியெழுப்பி தலைநிமிர்வுள்ள எதிர்கால தலைமுறையை உருவாக்குவதற்கான பயணமே இது. கிழக்குத் தமிழரின் அதிகார வலுவாக்கப் பயணத்தின் மற்றுமொரு பரிணாமமே கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக சிவனேசதுரை சந்திரகாந்தன் பொறுப்பெடுத்தது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளருமான பூபாலப்பிள்ளை பிரசாந்தன் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டம் கட்டுமுறிவு கிராமத்திற்கான பாதையில் கிராமிய சிறிய பாலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் தாமதமாக்கப்படுவது தொடர்பாக பார்வையிடுவதற்காக குறித்த புதன்கிழமை(19) மாலை பகுதிக்குச் சென்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் அதிக பேராதரவை பெற்றவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சினை பொறுப்பெடுத்தது ஆசனத்தினை சூடாக்கி வீர வசன அரசியல் பேசி கிழக்கு தமிழர்களின் இருப்பை மேலும் கேள்விக்குறியாக்கி அரசியல் அனாதைகளாக மக்களை நடுத்தெருவில் விடுவதற்காகவல்ல முப்பத்தி இரண்டு வருட யுத்தம் எழுபத்தி இரண்டு வருட அரசியல் வியாபாரம் கற்றுத்தந்த பாடத்தின் விளைவாக அரசியல் அதிகாரத்தில் நம்பிக்கையிழந்திருக்கின்ற மக்களிடத்தில் நம்பிக்கையை கட்டியெழுப்பி நிலைபேறான எதிர்கால தலைமுறையை உருவாக்குவதற்காகவேயாகும். 2008ல் கிடைத்த கிழக்கு மாகாண முதலமைச்சர் என்கின்ற அரசியல் அதிகாரத்தின் ஊடாக எவ்வாறு கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி பணிகளையும் கிழக்கு மக்களின் தனித்துவத்தையும் கட்டியெழுப்பி மாகாணத்திற்கான அரசியல் அதிகாரம் எவ்வாறு பயன்படுத்துவது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியது போன்று இராஜாங்க அமைச்சு மூலம் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளிட்ட கிழக்கு மாகாணத்திலும் எவ்வாறு மக்கள் பணிகளை முன்னெடுக்க முடியும் என்பதனை நிறைவேற்றிக்காட்டுவோம். கட்டுமுறிவு கிராமத்திற்கான பிரதான போக்குவரத்து பாதையில் பாலம் அமைப்பதற்காக ஆரம்பித்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தினை மீண்டும் துரிதமாக ஆரம்பிக்க வேண்டும் என குறித்த கிராமத்து மக்களால் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து குறித்த இடத்தினை பார்வையிடுவதற்காக வந்தோம்.

பாலத்திற்கான வேலைகளை உடனடியாக ஆரம்பிக்கும்படி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. விலைவாசி உயர்வு காரணமாக 20 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு செய்யப்பட்ட இப் பாலத்தின் மதிப்பீட்டுச் செலவானது தற்போது நாற்பத்தி ஒரு இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இக்குறித்த விஜயத்தின்போது கோரளைப்பற்று வடக்கு தவிசாளர் கண்ணப்பன் கணேசன் மற்றும் கோரளைப்பற்று தவிசாளர் திருமதி சோபாஜெயரஞ்சித் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**22312 | வே | 1985**
யாழ்நகர் | இந்து | MSc
Software Engineer
சதயம் (கும்பம்) | USA
174 செ.மீ | செவ்: 12

**22888 | வே | 1995**
பருத்தித்துறை | இந்து
BSc | IT Engineer
திருவாதிரை (மிதுனம்)
183 செ.மீ | செவ்: 01

**25018 | வே | 1988**
வல்வெட்டித்துறை | இந்து | BD
Cutomer Service Officer
சதயம் (கும்பம்) | UK
170 செ.மீ | செவ்: 08

**22498 | வே | 1992**
காரைநகர் | இந்து | BCom,
AAT | Asst. Accountant
திருவோணம் (மகரம்)
175 செ.மீ | செவ்: 08

**22510 | வே | 1990**
நெல்லியடி | இந்து | BBA,
CIMA | Audit Manager
விசாகம் (விருச்சிகம்)
167 செ.மீ | UAE

**22462 | வே | 1992**
வளலை | இந்து | BD,
HND | Civil Engineer
திருவோணம் (மகரம்)
173 செ.மீ

**22921 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSc
Civil Engineer
திருவோணம் (மகரம்)
172 செ.மீ

**25015 | வே | 1987**
நயினாதீவு | இந்து | BD
Supervisor | கனடா
சுவாதி (துலாம்)
167 செ.மீ

**22939 | ந | 1995**
அச்சுவேலி | இந்து | A/L
Restaurant Staff
பூராடம் (தனுசு) | France
168 செ.மீ

**22131 | வே | 1990**
கரணவாய் | இந்து | BSc
MSc | Civil Engineer
மகம் (சிம்மம்) | Singapore
168 செ.மீ

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25000 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
180 செ.மீ | சு.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**22318 | வே | 1991**
நல்லூர் | இந்து | A/L
Management Assistant
சித்திரை (துலாம்) | Divorced
160 செ.மீ | செவ்: 12

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**22095 | வே | 1986**
இணுவில் | இந்து | A/L
Chef | France
சுவாதி (துலாம்)
183 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**22993 | வே | 1995**
கொக்குவில் | இந்து
BSc | Engineer
கார்த்திகை (ரிஷபம்)
177 செ.மீ

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23071 | வே | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
அஸ்வினி (மேடம்)
164 செ.மீ | சு.செவ்: 05

**24943 | வே | 1993**
தெல்லிப்பழை | இந்து
Diploma | Teacher
சதயம் (கும்பம்)
160 செ.மீ | சு.செவ்: 11

**22609 | கோ | 1996**
பருத்தித்துறை | இந்து
Diploma | Teacher
புனர்பூசம் (மிதுனம்)
167 செ.மீ | செவ்: 12

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22495 | வே | 1996**
மானிப்பாய் | இந்து | A/L
Accountant
உத்தரம் (கன்னி)
165 செ.மீ | செவ்: 08

**22792 | வே | 1993**
அச்சுவேலி | இந்து | BSc
Demonstrator
கேட்டை (விருச்சிகம்)
160 செ.மீ | செவ்: 02

**23158 | வே | 1995**
வட்டுக்கோட்டை | இந்து
BBS Congras | சுவிஸ்
விசாகம் (துலாம்)
167 செ.மீ | சு.செவ்: 03

**22789 | வே | 1994**
கொக்குவில் | இந்து | BSc
Operation Analyst
பூசம் (கடகம்)
159 செ.மீ

**22513 | வே | 1994**
மானிப்பாய் | இந்து | BD
Marketing Executive
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ

**23086 | வே | 1996**
சண்டிலிப்பாய் | இந்து | BBA,
ACCA | Lecturer
விசாகம் (துலாம்)
170 செ.மீ

**22537 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSc
Software Engineer
ரேவதி (மீனம்)
165 செ.மீ

**22474 | வே | 1997**
வவுனியா | இந்து
BSc | QA Engineer
பரணி (மேடம்)
167 செ.மீ | செவ்: 02

**25012 | வே | 1990**
நல்லூர் | இந்து | BSc
Finance Officer
திருவாதிரை (மிதுனம்)
158 செ.மீ | செவ்: 07

**22696 | வே | 1996**
சித்தங்கேணி | இந்து | BSc
Software Engineer
திருவோணம் (மகரம்)
176 செ.மீ | சு.செவ்: 05

**22441 | வே | 1996**
திருநெல்வேலி | இந்து | HRM
PG Diploma (Final Year)
Staff Assistant | சித்திரை
(கன்னி) | 157 செ.மீ

**22158 | வே | 1993**
அல்வை | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
163 செ.மீ

**22891 | வே | 1993**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Bank
Assistant | மூலம் (தனுசு)
159 செ.மீ

**22936 | வே | 1993**
அளவெட்டி | இந்து
BBM | Teacher
மகம் (சிம்மம்)
151 செ.மீ | செவ்: 07

**22870 | வே | 1993**
ஏழாலை | இந்து | BSc,
PhD | Researcher
மூலம் (தனுசு) | Australia
157 செ.மீ | சு.செவ்: 10

**22660 | கோ | 1994**
அச்சுவேலி | இந்து
BFA | Job Seeker
மூலம் (தனுசு)
159 செ.மீ | சு.செவ்: 12

# மட்டக்களப்பில் அருந்ததி நிறுவனத்தின் 6வது
# மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்வு
















அருந்ததி நிறுவனத்தின் 6வது மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்வு இம்முறை மட்டக்களப்பு anjana grand palace இல் வெகு விமரிசையாக நடைபெற்றது.

30இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்கள் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்ததோடு கேக் வடிவமைப்பாளர்கள் தங்களால் அலங்கரிக்கப்பட்ட பலவிதமான கேக்குகளை காட்சிப்படுத்திய கேக் கண்காட்சியும் இடம்பெற்றிருந்தது. அருந்ததி நிறுவனத்தின் தலைமை நிர்வாகத்தினர் திரு சி.கலாமோகன் , ஓ. மேகலா தலைமையில் புத்தக புரவலர் திரு ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில், பங்குபற்றிய அனைத்து அழகுக்கலை நிபுணர்களும் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

